மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, திரு. ஆறுமுகம் உட்காருங்கள்.*

(ஈ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கோரம்பள்ளம் குளத்திற்கு தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் திறந்துவிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் கிருஷ்ணசாமி, என்ன சொல்லுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட, கோரம்பள்ளம் குளத்திற்கு தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் வராத காரணத்தால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பகுதி பாபநாசம்–மணிமுத்தாறினுடைய கடைநிலைப் பகுதியாகும். ஏற்கெனவே 37,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு நீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனுடைய பணி 31–10–2015 அன்று முடிவடைகிறது. அவர்கள் கோரிய பகுதிக்கு நீர் இருப்பினைப் பொறுத்து நீர் வழங்குகின்ற சூழல் நவம்பர் மாதம் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நவம்பர் மாதம் நீர் இருப்பைப் பொறுத்து உரிய நீர் அங்கே விடப்படும். ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்ட பாசனப் பகுதிகளுக்கு நீர் சென்று கொண்டிருக்கிறது. அதனால், இடையில் நீர் விடுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) கரும்பு விவசாயிகளுக்கு பாக்கித் தொகை வழங்கப்படாமை–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*